DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | **C.C.No.51/2024** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution<br>Defence |

| | | |
|---|---|---|
| Name | : | **விக்னேஷ்வரன்** (Pw.1) |
| Father/Husband Name | : | **ஜெயராமன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day September of 2024

(1 வது எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

**நான் தற்போது கீழகாஞ்சரங்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ே◌ஹாட்டலில் சர்வர் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் இருவரும் எனது உறவினர்கள் ஆவார்கள். 15.01.2021 ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது மாலை 5.00 மணி இருக்கும். அப்போது எதிரி சேதுராமன் அங்கு வந்து முதலில் கல்லை வைத்து எனக்கு ஏற்கனக்கனவே விபத்து நடந்து பிளேட் வைத்திருந்த வலது கையில் புஜத்திற்கு கீழ் பகுதியில் அடித்தார். இரண்டாவதாக கம்பை வைத்து அதே கையில் அதே இடத்தில் அடித்தார். எனது மனைவி மாரிபாண்டி சம்பவத்தை விலக்க வந்தார். அவரை பார்த்து எதிரி செல்வமாரி தேவிடியா மகளே என்று அசிங்கமாக பேசி கம்பை வைத்து இடது பக்க கன்னத்தில் அடித்தார். கன்னம் வீங்கி விட்டது. எனது மைத்துனர்**

முத்துப்பாண்டி எதிரி சேதுராமனின் தங்கை அம்பிகாவை விரும்பினார். நாங்கள் தான் அவர்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தோம் என்று சொல்லி எங்களை அடித்தனர். ஆனால் அவர்களது திருமணத்திற்கு 1 வது எதிரியின் அப்பா அம்மா சம்மத்தினர். எதிரிகள் சம்மதிக்கவில்லை. சம்பவத்தின் போது எனது அத்தை ராமு சம்பவத்தை விலக்க வந்தார். அப்போது எதிரிகள் அவரது மருமகன் சொல்வதை கேட்கவில்லையென்றால் கொன்றுவிடுவதாக மிரட்டினர். பின்னர் காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு போலிசார் வந்தனர் போலீசாரிடம் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு அதுவாகும். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். புகாரை நான் சொல்ல சொல்ல எனது சகலை கருப்பசாமி எழுதினார். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்திற்கு பிறகும், தற்போதும் எதிரிகள் என்னை மிரட்டி வருகிறார்கள். நான் ஊருக்கு செல்ல முடியாமல் காரியாபட்டியில் இருந்து வருகிறேன்.

**எ.த.கு.வி:–**

1 வது எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கபடுகிறது.